## August 24, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஆண்டுக்கு 50 ராக்கெட்டுகளை விண்ணில் செலுத்த வேண்டும்; அதற்காக விண்வெளி ஆராய்ச்சியில் தனியார் நிறுவனங்கள் அதிக அளவில் பங்கேற்க வேண்டும்' என பிரதமர் நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார். தேசிய விண்வெளி தினத்தை (ஆக. 23) முன்னிட்டு பிரதமர் மோடி வெளியிட்ட தனது காணொலி உரையில் கூறி யிருப்பதாவது:

   i. நாட்டின் எதிர்கால விண்வெ ளித் திட்டங்களுக்காக விண் வெளி வீரர்கள் குழுவை உருவாக் குவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தக் குழுவில் நாட்டின் இளை ஞர்கள் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும்.
   ii. மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தை இந்தியா விரைவில் செயல்படுத்த உள்ளது. தொடர்ந்து, சொந்த விண்வெளி நிலையத்தையும் நாம் அமைக்க உள்ளோம்.
   iii. விண்வெளி ஆராய்ச்சியில் தனி யார் நிறுவனங்கள் அதிக அளவில் ஆர்வத்துடன் பங்கேற்க வேண் டும். அப்போதுதான், ஆண்டுக்கு 50 ராக்கெட்டுகளை விண்ணில் செலுத்தும் திறனை நாம் எட்ட முடியும்.
   iv. பயிர்க் காப்பீட்டில் செயற்கைக்கோள் அடிப்படையிலான ஆய்வு, மீனவர்களுக்கு செயற்கைக்கோள் அடிப்படையிலான தகவல் பரிமாற்றம் மற்றும் பாதுகாப்புத் திட்டம், பேரிடர் மேலாண்மை திட்டங்கள், ரயில்வே உள்பட பல்வேறு அமைச்சகங்களை ஒன்றிணைத்து ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் செயல்படுத்துதலுக்கான பிரதமரின் கதிசக்தி, தேசிய மாஸ்டர் பிளான் திட்டத்தில் புவியியல் தரவுகள் பயன்பாடு என அரசு நிர்வாகத்தில் விஞ்ஞான தொழில்நுட்பம் முக்கியப் பங்காற்றி வருகிறது என்றார் பிரதமர்.

2. அமெரிக்கா உடனான இருதரப்பு வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தையில் குறிப்பிட்ட 'சிவப்பு கோடுகளை' இந்தியா கொண்டுள்ளது. அதாவது, விவசாயிகள் மற்றும் சிறு உற்பத்தி யாளர்களின் நலனைப் பாதுகாப்பதில் சமரசம் செய்ய முடியாது' என்று வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

   i. மேலும், ரஷியாவிடமிருந்து மலிவு விலையில் கச்சா எண ணெயை இந்தியா கொள்முதல் செய்து, அதை சுத்திகரித்து ஐரோப்பா உள்பட பிற நாடுகளுக்கு அதிக விலைக்கு விற்று லாபம் பார்ப்பதாக அமெரிக்க அரசு அதிகாரிகள் கூறுவது வேடிக்கையானது. இந்தியாவிடமிருந்து எண்ணெயை வாங்குமாறுயாரும் கட்டாயப்படுத்தப் போவதில்லை. விருப்பமில்லை எனில், இந்தியாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதை நாடுகள் தவிர்த்துவிட லாம் என்றார்.

3. குலசேகரன்பட் டினத்தில் இருந்து ஒன்றரை ஆண் டுகளில் ராக்கெட் விண்வெளியில் ஏவப்படும் என்று இஸ்ரோ தலை வர் வி.நாராயணன் தெரிவித்தார்.

i. ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரி கோட்டாவில் 3-ஆவது ஏவுதளம் அமைக்க ரூ.4,000 கோடியை மத்திய அரசு ஜனவரி மாதம் ஒதுக்கி அதற்கான பணி நடைபெற்று வருகிறது. அதேவேளையில், குலசே கரன்பட்டினத்திலும் ஏவுதளம் அமைக்கும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது. இன்னும் ஒன்றரை ஆண்டில் அங்கிருந்து ராக்கெட் ஏவப்படும்.

ii. நாம் முதன்முதலில் தயாரித்த ராக்கெட்டின் பெயர் எஸ்.எல்.வி. 3. அதை உருவாக்கியவர் மறைந்த குடியரசுத் தலைவர் அப்துல் கலாம். நாம் தயாரித்த முதல் ராக்கெட்டில் 40 கிலோ எடையிலான செயற்கைக்கோள்களைத் தான் கொண்டு செல்ல முடியும்.

iii. இப்போது நம்மிடம் இருக்கும் மார்க்-3 ராக்கெட் 10,000 கிலோ வரையிலான செயற்கைக்கோள்களை விண்ணுக்கு கொண்டு சென்று நிலை நிறுத்தும் திறன் படைத்தது.

iv. எதிர்காலத்துக்காக இப்போதுநாம் வடிவமைத்து வரும் ராக்கெட் 80,000 கிலோ பொருள்களை, செயற்கைக்கோள்களை கொண்டு செல்லும் திறன் படைத்தது. இப்போதைக்கு அந்த ராக்கெட்டுக்கு பெயர் வைக்கவில்லை.

v. இந்தியாவுக்கான விண்வெளி ஆய்வு மையம் 2035-க்குள் அமைக்கப்படும்.

vi. சூரியனை படம் பிடிப்பதற்காக அனுப்பப்பட்ட ஆதித்யா செயற்கைக்கோள் தன்னுடைய பணியை சிறப்பாகசெய்துவருகிறது. நிலவில் தண்ணீர் இருப்பதை சந்திரயான் நிரூபித்துள்ளது. ஆனால், எவ்வளவு நீர் இருக்கிறது என்பது குறித்து, இனி வரும் காலங்களில் அனுப்பப்படும் செயற்கோள்கள் மூலம் உறுதி செய்யப்படும். அதேபோல விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பி, மீண்டும் பாதுகாப்பாக கொண்டு வரும் திட்டம் 2027-இல் நிறைவேற்றப்படும் என்றார்.

4. லண்டன் உலோக வர்த்தக சந்தையைப் போன்று விரைவில் கனிம வர்த்தக சந்தையை மத்திய அரசு அமைக்க உள்ளது' என்று மத்திய நிலக்கரிமற்றும் சுரங்கத் துறை அமைச்சர் ஜி.கி ஷண் ரெட்டி தெரிவித்தார்.

i. இந்திய பங்குச்சந்தை ஒழுங்காற்று வாரிய (செபி) நடைமுறைகளுக்கு உட்பட்டு இந்த கனிமசந்தை உருவாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ii. உலகின் முன்னணி உலோக வர்த்தகமையங்களில் ஒன்றாக திகழும் லண்டன் உலோக வர்த்தக சந்தையில், தாமிரம், நிக்கல், அலுமினியம், ஈயம், துத்தநாகம் உள்ளிட்ட இரும்பு அல்லாத உலோகங்ள் வர்த்தகம் செய்யப்படுகின்றன. இந்தச் சந்தையில் நிர்ணயிக்கப்படும் உலோகங்களின் விலை உலகளாவிய உலோக தொழிலுக்கு முக்கிய குறியீடாகவும், சுத்திகரிக்கப்பட்ட உலோகத்தின் விலையை நிர்ணயிப்பதற்கான ஆதாரமாகவும் திகழ்கிறது.

5. அஞ்சல் சேவை மூலம் அனுப்பப்படும் 800 டாலர் வரை மதிப்புள்ள பொருள்களுக்கு அளிக்கப்பட்டிருந்த வரிவிலக்கை அமெரிக்க அரசு வாபஸ்

பெற்றதைத் தொடர்ந்து, அந்நாட்டுக்கான அஞ்சல் சேவையை இந்தியா தற்காலிகமாக நிறுத்தியுள்ளது. 800 டாலர் வரை மதிப்புள்ள சர்வதேச அஞ்சல் பொருள் களுக்கான வரி விலக்கு ஆகஸ்ட் 29 முதல் திரும்பப் பெறப்படும் என்று அமெரிக்க அரசு அறிவித்திருந்தது. இதைத் தொடர்ந்து,

6. இந்தியாவுக்கான புதிய அமெரிக்க தூதராக தனது நெருங்கிய உதவியாளர் செர் ஜியோ கோரை அதிபர் டொனால்ட் டிரம்ப் நியமித்துள்ளார்.

7. நாட்டிலேயே முதன்முறையாக சென்னை ஒருங்கிணைந்த ரயில் பெட்டிகள் தயாரிப்பு நிறுவனத்தில் (ஐசிஎஃப்) தயாரிக்கப்பட்ட ஹைட்ரஜன் ரயில் என்ஜின் மற்றும் 8 பெட்டிகள் ஹரியாணா மாநிலத்துக்கு கொண்டு செல்லப்பட்டன.

i. சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ஏற்ப ரயில் போக்குவரத்தை மாற்றும் வகையில் வடக்கு ரயில்வே மண்டலத்தின் சார்பில் ஹைட்ரஜன் ரயில் என்ஜின் மற்றும் அதற்கான பெட்டிகள் தயாரிக்கத் திட்டமிடப்பட்டது. அதன்படி,
ரூ.80 கோடியில் ஹைட்ரஜன் என்ஜின் தயாரிக்க சென்னையில் உள்ள ஐசிஎஃப் நிறுவனத்திடம் பணிகள் ஒப்படைக்கப்பட்டன.

8. கேழ்வரகு உற்பத்தித் திறனில் நாட்டிலேயே தமிழகம் முதலிடத்தைப் பிடித்துள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. மேலும், மக்காச்சோளம், மொத்த எண்ணெய் வித்துகள் மற்றும் கரும்பு உற்பத்தித் திறனில் 2-ஆம் இடத்தையும், சிறுதானியங்கள் மற்றும் நிலக்கடலை உற்பத்தி திறனில் 3-ஆவது இடத்தையும் தமிழகம் பிடித்துள்ளது.

9. விவசாயிகள் பயிர்க் கடன் பெறும் நடைமுறையை எளிதாக்கவும், விரையில் கடன் கிடைக்கவும் தமிழக அரசு சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் ஒன்றாக, இணையவழியில் விண்ணப்பித்த அன்றே பயிர்க் கடன் வழங்கும் புதிய திட்டத்தை அண்மையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தருமபுரியில் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றும் முதல்வர் அறிவித்தார். இந்தத் திட்டம் விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பதுடன், நல்ல வரவேற்பையும் பெற்று வருகிறது.

10. செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-

i. ரணில் விக்ரமசிங்க - இலங்கை முன்னாள் அதிபர்
ii. மார்கோ ரூபியோ - அமெரிக்க வெளியுறவுச் செயலாளர்